017

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை– 2008/2009
மட்டம் - 5
**LWU 3314/4334** – சுற்றாடல் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 01.04.2009 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்

1. சுற்றாடல் தராதரம் குறைவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக வறுமை உள்ளது. எனவே வறுமையை போக்குதல் மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகளை அவர்களுக்கு வழங்குதல் என்பன சுற்றாடல் பாதுகாப்பு எனும் இலக்கினை அடைவதற்கு சிறந்த வகையில் சேதி செய்து கொடுக்கும்.

   இலங்கையுடன் தொடர்புபடுத்தி மேற்கண்ட கூற்றினை ஆராய்க. உமது விடையில் நீர் கட்டாயமாக,

   (அ) நடைமுறை பிரச்சனைகள் மற்றும் சிக்கல்கள் பற்றிய உதாரணங்களைக் காட்ட வேண்டும்; மற்றும்
   (ஆ) சூழல் தீழ்ப்பினை விளைவிக்காது வறுமையில் இருந்து விடுபடும் உபாயங்களை முன்மொழிக மற்றும் இவ்வுபாயங்களை ஆதாரப்படுத்துவதற்கு இயலுமான சட்டங்கள் மற்றும் /அல்லது சட்டங்களுக்கான திருத்தங்களை முன்மொழிக.

2. சுற்றாடல் பிரச்சனைகளைக் கையாள்வதற்கு விசேட சுற்றாடல் நியாயசபைகளை உருவாக்குதல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆலோசித்துவருகின்றது. நீர் இப்பிரச்சனையைக் கற்று உமது பரிந்துரைகளைச் செய்வதற்கென ஓர் சபையில் நியமிக்கப்பட்டுள்ளீர். இச்சபையானது இலங்கையில் சுற்றாடல் நியாயசபைகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும், இது அமைச்சரவைக்கு முன்மொழியப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றது.

   சபை சார்பில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவென சபை உம்மிடம் ஓர் விபரிப்புக் குறிப்பு (Memo) இனை தயார்செய்வதற்குக் கோருகின்றது. பின்வரும் விடயதானங்களின் மீது உமது விபரிப்புக் குறிப்பு (Memo) பரிந்துரைகளை, நியாயப்படுத்தல்களுடன் உள்ளடக்க வேண்டும்.

   (i) சுற்றாடல் நியாயசபைகளின் தேவைப்பாடு
   (ii) இந் நியாயசபைகளுக்காக நியமிக்கப்பட வேண்டியவர்கள் யாவர்?
   (iii) அந் நியாயசபைகளின் நியாயாதிக்கம்
   (iv) அவர்களின் தொழிற்பாடுகளை செயற்படுத்த வேண்டிய வழிமுறைகள்

3. நிலையாதார அபிவிருத்தியின் இலக்கினை விருத்தியடையச் செய்வதற்கு இலங்கையின் சூழல் தாக்க மதிப்பீட்டு நடபடிகள்(EIA) பொதுவாகத் தவறிவிட்டன.

   நீர் மேற்கண்ட கூற்றுடன் உடன்படுகின்றீரா? மேற்கண்ட கூற்றின் பின்னணியில் இலங்கையில் சூழல் தாக்க மதிப்பீட்டு(EIA) சட்டத்தின் பலத்தினையும் பலவீனங்களையும் பகுப்பாய்க. உமது விடையில் நீர் கட்டாயமாக இயைபுடைய உதாரணங்களை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

4. தப்ரபேனின் கிழக்குக்கரையோரத்தின் அப்பால் பாரிய திமிங்கிலக்கூட்டம் ஒன்று கடந்த இரண்டு வருடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக, தப்ரபேன் பாரிய வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளினைக் கவரும் இடமாகக் காணப்பட்டதுடன் நாட்டிற்கான வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. உல்லாசப்பயணக் கம்பனிகள் பல திமிங்கிலங்களைக் பார்வையிடுவதற்கென கப்பல்களில் அவர்களை ஏற்றிச்செல்லத் தொடங்கியதுடன் அதன்மூலம் பாரிய வருமானத்தினையும் ஈட்டினர். உல்லாசப்பயணச் சபையும் (Turist board) தப்ரபேனினை உலகலாவிய ரீதியில் திமிங்கிலங்களை நோக்கும் மத்தியஸ்தலமாக விளம்பரம் செய்யத் தொடங்கியது.

எப்படியிருப்பினும், அப்பிரதேசத்தின் மீன்பிடியாளர்கள் திமிங்கிலங்களை பார்வையிடுவதற்காக அங்குவரும் பல கப்பல்கள் தமது மீன்பிடிஸ்தானங்களை கூட்டமாக நெருக்குவதுடன் மீன்களைக் கலைப்பதாகவும் முறைப்பாடு செய்யத் தொடங்கினர். கடந்த இரண்டு வருட காலமாக அவர்களது மீன்பிடி அளவு குறைந்ததுடன் அதன் காரணமாக வருமானமும் குறைந்ததாகக் கூறுகின்றனர். மேலும் ஓர் அரச சார்பற்ற அமைப்பான கடல்வாழ் விலங்குகள் பாதுகாப்பு நிறுவகம், அருகிவருகின்றதும் வெளிக்கடற் பிரதேசத்தில் இருந்து வந்துள்ளதுமான இவ் திமிங்கிலங்களுக்கு பாரியளவான உல்லாசப்பயணக் கப்பல்கள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாக கவலை தெரிவித்தன. மீன்பிடியாளர்கள் மற்றும் அரசார்பற்ற அமைப்பு ஆகியன திமங்கிலங்களைப் பார்வையிடுகின்ற நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படல் அல்லது முடியுமாயின் தடுக்கப்படல் வேண்டுமென விரும்புகின்றன. இவ்விடயத்தின் நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ள தப்ரபேனின் சமுத்திரம் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் திணைக்களத்திற்கு இவ்விடயம் ஆற்றுப்படுத்தப்பட்டது. திமிங்கிலங்களை பார்வையிடும் கம்பனிகளது நிலைப்பாட்டினை உல்லாசப்பயணச்சபை ஆதரித்தது.

குறித்த திணைக்களத்தின் பணிப்பாளர் இப்பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் உம்மிடம் பரிந்துரைகளைக் கோருகின்றார். உமது பரிந்துரைகளை காரணங்களைக் காட்டுவதனூடு சமர்ப்பிக்கவும். தப்ரபேனின் எல்லா சட்டங்களும் சர்வதேசச் சட்டங்களும் இலங்கையை ஒத்ததாகும்.

5. தேசிய நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்கும்போது, சர்வதேசச் சுற்றாடல் சமவாயங்களாவன. பயனுள்ள வழிகாட்டல்களை வழங்க முடியும். எப்படியிருப்பினும், அவை அமுலுக்குக் கொண்டுவரப்படமுடியாத காரணத்தினால் ஏனைய எந்த நோக்கங்களுக்கும் பயன்வலுவற்றன.

சர்வதேசச் சுற்றாடல் சமவாயங்கள் பற்றிய அச்சொட்டான ஓர் கணிப்பீடாக இது உள்ளதா? உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுவதனூடு இதனை ஆராய்க.

6. மிக்ரோனீசியா விற்கு செரன்டிப் சனாதிபதி ஓர் அரச பயணத்தினைச் செய்வதற்கு திட்டமிட்டிருந்தார். அப்பயணத்தின்பொழுது, மிக்ரோனீசிய மக்களுக்கென ஓர் யானைக்குட்டியை பரிசளிக்கவென செரன்டிப் அரசாங்கம் தீர்மானித்தது. இந்நோக்கத்திற்காக தேசிய யானைகள் தரிப்பு இல்லத்தில் இருந்து மாலா எனும் இரண்டு வயதுடைய யானையைத் தெரிவு செய்தனர். முன்னர், ஏனைய யானைகள் குழுவுடன் மாலாவும் காட்டிற்குள் மீள அனுப்பப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. செரன்டிப்பில் உள்ள யானைகளைப் பாதுகாப்பதற்கு என தம்மை அர்ப்பணித்துள்ள அலி ரெக்க கன்னோ எனும் அரச சார்பற்ற நிறுவனம் மாலாவினை மிக்ரோனீசியாவிற்கு அனுப்புவது தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்தது. யானைகள் செரன்டிப்பில் அருகிவருவதாகவும் உலகில் அருகிவரும் ஓர் உயிரினமாக அது வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வாதிடுகின்றனர். 20 வருட குடியியல் யுத்தத்தின் இறுதியில் மிக்ரோனீசியா புதிதாக உருவாக்கப்பட்ட நாடு என்பதுடன் மனிதாபிமான நிலையில் ஓர் யானையினை பராமரிக்கும் போதிய வசதிகள் அல்லது போதிய நிறுவனங்கள் அங்கு இல்லாதமையைச் சுட்டிக்காட்டி மேலும் அவர்கள் வாதிடுகின்றனர்.

அலிரெக்க கன்னோ மாலாவினை மிக்ரோன்சியாவிற்கு அனுப்புவதனை நிறுத்துவதற்கும், இத் தீர்மானத்தினை நீதி மன்றத்தில் கேள்விக்குட்படுத்தவும் விரும்புகின்றனர். அதனைச்

செய்வதற்கான அடிப்படைகளைப்பற்றி உமது ஆலோசனையைக் கோருகின்றனர். செரன்டிப்பின் சட்டங்கள் இலங்கையின் சட்டங்களைப் போன்றன எனக்கருதிக்கொண்டு தேசிய சட்டங்கள் மற்றும் செரன்டிப்பின் சர்வதேசக் கடப்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புருத்தி அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

7. பொதுத்தொல்லைச் சட்டமானது ஒப்பீட்டு ரீதியில் முக்கியத்துவம் அற்ற சட்டப்பிரிவில் இருந்து சுற்றாடல் தீழ்ப்பினைக் கட்டுப்படுத்துவதற்கான மிகப் பயனுள்ள கருவிகளில் ஒன்றாக அபிவிருத்தி அடைந்துள்ளது.

இலங்கையினதும் ஏனைய நியாயாதிக்கங்களினதும் சட்ட அபிவிருத்தியுடன் தொடர்புறுத்தி இக் கூற்றினை ஆராய்க.

8. உலகின் மிகவும் நெருக்கடியான பிரச்சனைகளில் ஒன்றாக தண்ணீர்ப்பற்றாக்குறை மாறிவருகின்றது. இலங்கையிலும் அது ஓர் முக்கியமான பிரச்சனையாக மாறியுள்ளது. இலங்கை அரசாங்கம், நாட்டிற்கான தேசிய நீர்க் கொள்கையொன்றினை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளது. ஒப்புரவு மற்றும் நிலையாதாரம் எனும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அக்கொள்கை அமையப் போகின்றது.

நீர் அவ் உருவாக்கல் குழுவில் இருந்திருப்பின் எல்லா இலங்கைப் பிரசைகளும் நீரினை அணுகுவதற்கான ஒப்புரவான முறைமையினையும் அதேவேளை நீர் வளத்தினை நிலையாதார முறையில் உபயோகிப்பதனையும் உறுதிப்படுத்துவதான என்னென்ன பரிந்துரைகளை முன் வைப்பீர்.

(பதிப்புரிமையுடையது).